மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. த. சோனையா : இராமனுதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், பில்வாய்க்கரை சாலையில் உள்ள மாரைநாடு கண்மாய் இராமனுதபுரம் மாவட்டத்தில் உள்ள இரண்டாவது பெரிய கண்மாய். இந்த மடையில் சில நேரங்களில் போக்குவரத்தே துண்டிக்கப்படுகிற நிலை ஏற்படுகிறது. ஒரு பாலம் இந்த இடத்தில் கட்ட வேண்டியது மிக அவசியமாகும். இந்தப் பாலத்தை அமைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்தப் பாலத்தைக் கட்ட 7,500 ரூபாய் ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. குத்தகை ஒப்பந்தக்காரரிடம் வேலை ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. வேலை மிக விரைவில் முடிவடையும் என்ற தகவல் தான் வந்திருக்கிறது.

Irenipuram–Kappucaud road.

*** 497 Q.**—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is a proposal to repair the Irenipuram-Kappucaud road in Vilavancode taluk, Kanyakumari district ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. என். டென்னிஸ் : இது ஒரு பஸ் ரூட் உள்ள ஹைவேஸ் ரோடு. இந்த கேள்வி கேட்கப்பட்ட நேரத்தில் பழுதடைந்து இருந்தது. ஆனால், இப்போது பஸ் போக வரக் கூடிய நிலை இருக்கிறது. ஆனால் இந்த ரோட்டிற்கு முழுமையாக தார் போட்டதாக தெரியவில்லை. அந்த ரோடு பூராவிற்கும் தார் போட அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : முழு பாதையில் தார் போட வேண்டும் என்றால் அரசு நிதி நிலை வளமாக இருக்க வேண்டும். இது பற்றிப் பின்னர் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த ரோடு இரு தொகுதிகளை இணைக்கின்ற ஒரு ரோடாக இருக்கிறது. அது மட்டுமல்லாமல் கல்லூரிகளுக்கும் ஆஸ்பத்திரிக்கும் செல்லக்கூடிய ஒரு முக்கியமான சாலையாகவும் இருக்கிறது. ஆகையால்தான் பஸ்ரூட் ஏற்பட்டிருக்கிறது. அதனால் பணம் கொஞ்சம் அதிகம் செலவானாலும், அதை செலவு செய்து அந்தச் சாலையை பழுது பார்த்து சீர் செய்ய அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இப்போதே அந்தச் சாலை "நீரிற்று மெக்கடம் சாலை"யாகவும், தார் சாலையாகவும் இருக்கிறது. எல்லாவற்றையும் தார் சாலையாக்க வேண்டுமென்று

எண்ணம் இருக்கிறது. நிதிநிலை இடம் தராததால் அந்த எண்ணம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது ; நிதி வசதி ஏற்படும்போது நிறைவேற்றப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*498 வினு—திரு. ஏ. சுவாமிதாஸ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல், தக்கலை ஆகிய நகரங்களுக்கும் இரணியல், நுள்ளிவிளை வில்லுக்கிரி, மாடதட்டுவிளை ஆகிய கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில், கல்குளம் தாலுக்காவில் மாம்பழத்துறை என்னுமிடத்தில் அணைகட்டி நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த முக்கிய நகரங்களுக்கும் இரணியல், நுள்ளிவிளை, வில்லுக்கிரி, மாடதட்டுவிளை ஆகிய கிராமங்களுக்கும் சுத்தமான பாதுகாக்கப்பட்ட தண்ணீர் இல்லாத குறை நீண்ட நாட்களாக இருந்துகொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக மாம்பழத் துறையிலிருந்து தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று ஒரு திட்டத்தை தீட்டினர்கள். அதற்கு ஊராட்சி ஒன்றியங்களும், நகராட்சிகளும் உரிய பணம் கூடக் கட்டி இருக்கிருர்கள். ஆகவே, இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து, விரைவில் தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, 1965–லே ஒரு திட்டம் தயாரித்து, அதற்கு 15,850 ரூபாய் இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் கட்டவேண்டுமென்று கேட்கப்பட்டது ; இதுவரையில் அவர்கள் கட்டவில்லை. 1973–ல் பத்மனபபுரத்தை மட்டும் தனியாகப் பிரித்து, ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. அதற்கு 19,000 ரூபாய் ஆய்வுக் கட்டணம் கட்டவேண்டுமென்று சொல்லப்பட்டது ; இதுவரையில் கட்டவில்லை. அவர்கள் இந்தக் கட்டணத்தைச் சர்க்காரே கட்டவேண்டுமென்று சொல்லியிருக்கிருர்கள். மற்ற நுள்ளிவிளை, வில்லுக்கிரி, மாடதட்டுவிளை ஆகிய பகுதிகளும் பத்மனபபுரத்திலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்வதாக இருந்தால், உரிய ஆய்வுக் கட்டணத்தைக் கட்டினுல், மேற்கொண்டு முடிவு செய்யலாம்.